நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 21/2025

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரவிச்சந்திரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | குழந்தைவேலு |
| கிராமம் | : | காடையாம்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 62 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுலை மாதம், 15–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.15 PM

1. நான் 30.06.2025 ம் தேதி மேட்டுர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ளேன். கடந்த 06.10.2024 ம் தேதி காலை 08.30 மணிக்கு நான் மேட்டுர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மதுவிலக்கு குற்றதடுப்பு அலுவலாக

நிலைய தலைமைகாவலர் முருகன் மற்றும் ராஜு ஆகியோருடன் ரோந்து அலுவல் மேற்கொண்டு மேட்டூர் ஆண்டிகவுண்டன் நகர் சரோஜா தியேட்டர் அருகில் கண்காணித்துக்கொண்டு சென்றோம்.

2. அப்போது அங்கு கூட்டமாக இருந்தார்கள். எங்களை கண்டதும் கூட்டம் கலைந்துவிட்டது. ஒருவர் மட்டும் TN 33 BH 8967 TVS Zest வாகனத்தில் நின்றுக்கொண்டிருந்தவரை சந்தேகத்தின் பேரில் விசாரிக்க தனது பெயர் ராஜமாணிக்கம்(45), த.பெ. மணிவேல் என்று சொன்னார். மேலும் அவர் வைத்திருந்த வாகனத்தின் டிக்கியை திறந்து காண்பிக்க சொல்லி பார்த்தபோது அதில் 180 மி.லி அளவுக்கொண்ட 26 அரசு மதுபான Black Pearl பிராந்தி பாட்டில்களை வைத்திருந்தார். எந்த உரிமமும் இல்லாமல், அவர் சொற்ப லாபத்திற்காகவும், சில்லறை விற்பனைக்காகவும் வைத்திருப்பதாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

3. பின்னர் காலை 08.45 மணிக்கு அவரை கைதுசெய்து அவ்விடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் மேற்படி பாட்டில்களை உடன்வந்த போலீசார்கள் முன்னிலையில் காலை 9.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்டது. பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் காலை 9.00 மணிக்கு நிலையம் வந்து முறைப்படி திரேகசோதனை செய்து பாரா காவலர் வசம் ஒப்படைத்துவிட்டு பின்னர் மேட்டூர் காவல் நிலைய குற்ற எண். 189/2024, ச.பி. 4(1)( C ) TNP Act ன் கீழ் வழக்கு பதிவுசெய்தேன். பின்னர் எதிரியை காலை 10.30 மணிக்கு தக்க ஜாமினில் விடுவித்தேன். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) ( ஏற்கனவே கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆககுறியீடு செய்யப்பட்டுள்ளது.)**

4. முதல் தகவல் அறிக்கையை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், இவ்வழக்கை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். என்னுடன் ரோந்து பணிக்கு உடன் வந்த இரண்டு காவலர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

5. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு

அனுப்பபட்டது. ( **படிவம் –91 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) மேற்படி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்ட்ட மதுபான பாட்டில்கள் இந்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி புகைப்படம் எடுக்கப்பட்டு உரிய நடவடிக்கைக்காக உதவி கலால் ஆணையர் அவர்களுக்கு அனுப்ப வேண்டி மேட்டுர் காவல் ஆய்வாளர் வசம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது. (**அதற்கான புகைப்படங்கள் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான பஞ்சநாமா அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. வழக்கில் கைப்பற்றப்பட்ட TVS வாகனமானது அரசுக்கு பறிமுதல் செய்ய அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. அந்த வாகனம் பறிமுதல் நடவடிக்கைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. ( **அதற்கான வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரி மீது 2.12.2024 ம் தேதி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் யாருடைய உத்தரவின் பேரில் ரோந்திற்கு சென்றேன் என்றால் நாங்கள் வழக்கமாக செல்லும் ரோந்து பணியின் போது எதிரியை பார்த்தேன். என்னுடன் மற்ற இரண்டு காவலர்கள் வந்தார்கள். ஆண்டிகவுண்டனுார் அருகில் வைத்து எதிரியை பார்த்தோம். அந்த இடம் ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். நாங்கள் சென்றபோது சம்பவ இடத்தில் சுமார் 10 முதல் 15 நபர்கள் இருந்திருப்பார்கள்.
2. எதிரியிடம் கைப்பற்றப்பட்ட மதுபானபாட்டில்கள் அவருடைய வண்டி சீட்டின் அடிபுறத்தில் வைத்திருந்தார். நான் சொல்லும் இருசக்கர வாகனத்தில் 33 மதுபானபாட்டில்கள் வைக்க முடியாது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரை சம்பவயிடத்தில் வைத்துதான் தயார் செய்தேன். எனக்கு தட்டச்சு செய்ய தெரியாது. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட கைப்பற்றுதல் மகசர் தட்டச்சு செய்யப்பட்டுதான் தயார் செய்யப்பட்டது. யார் தட்டச்சு செய்தார்கள் என்று நியாபகம் இல்லை. தயார் செய்யப்பட்டிருந்த கைப்பற்றுதல் மகசரில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன்.

3. சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டது. கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவை சம்பவயிடத்திற்கு கொண்டு செல்லவில்லை. என்னிடம் இருந்த கைப்பற்றுதல் மகசர் மாதிரியில் சம்பவயிடத்தில் வைத்து விவரங்களை நிரப்பிக்கொண்டேன். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யவில்லை என்றாலும் எதிரி அந்த சமயத்தில் மேட்டுர் காவல் நிலையத்தில் ஊர்காவல் படையில் பணிபுரிந்தார் என்றாலும் அவர்மீது உள்ள கால்புணர்ச்சியின் காரணமாக இந்த பொய் வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.
4. சம்பவம் சமயத்தில் எதிரி ஊர்காவல் படையில் பணிபுரிந்த விவரம் எனக்கு தெரியாது. அதன்பின்னிட்டு தெரிந்துக்கொண்டேன். கைப்பற்றுதல்மகசரில் தனிநபர் சாட்சிகளிடம் சாட்சி கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். அப்போது சம்பவயிடத்தில் யாரும் இல்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் முதல் விசாரணையில் 10–15 நபர்கள் சம்பவயிடத்தில் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
5. சம்பவயிடத்தில் கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்கள் அரசு மதுபான கடையில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். எந்த கடையில் வாங்கினார் என்று நான் விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை. அந்த மதுபான பாட்டில்கள் வாங்கியதற்கான ரசீது எதுவும் எதிரியிடம் இருந்து கைப்பற்றவில்லை. எதிரி மதுபான பாட்டில்களை விற்பனைக்காகதான் வைத்திருந்தார்.
6. எதிரியிடம் இருந்து மதுபான பாட்டில்கள் வாங்கிய நபர்களை நான் விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை. நான் இந்த வழக்கில் கைப்பற்றிய மேற்படி இருச்சக்கர வாகனத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அந்த வாகனம் தற்போது எங்கு உள்ளதென்று எனக்கு தெரியாது. அது தொடர்பான வேண்டுகோள் கடிதத்தை மட்டும்தான் கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன்.
7. நான் சம்பவயிடத்திற்கு போகவில்லை என்றாலும் நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரி மேட்டுர் காவல் நிலையத்தில் ஊர்காவல் படையில் பணிபுரிந்தபோது இருந்த காழ்புணர்ச்சியின் காரணமாக எதிரி மீது ஒரு வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றாலும் உண்மையில் சம்பவம்

நடந்திருந்தால் தனிநபர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றாலும் பொய் வழக்கு காரணமாக மேற்படி எதிரி இன்றுவரை ஊர்காவல் படையில் இருந்து தற்காலிக பணிநீக்கம் செய்து இன்றுவரை பணியில் சேரமுடியாமல் இருந்துவருகிறார் என்றாலும் சரியல்ல. அதுப்பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.50 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**